
# ஆசிரியர் துணையோடு வாசித்தல்

## நோக்கங்கள்

1. மாணவர்களின் கேட்டல், பேசுதல் திறன்களை வளர்த்தல்
2. மாணவர்களுக்கு வாய்விட்டு வாசிக்க ஊக்கமளித்தல்
3. மாணவர்கள் சொற்களைச் சரியாக ஒலிக்கக் கற்பித்தல்
4. மாணவர்கள் தங்கள் சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ள வழிவகுத்தல்







புரிந்துணர்வும் மகிழ்வுணர்வும்

### 1) ஆயத்த நடவடிக்கை



- ஆசிரியர் கருப்பொருளுக்குத் தொடர்புடைய பாடலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களுடன் இணைந்து உற்சாகமாகவும் அசைவுகளுடனும் பாட வேண்டும்.

அல்லது

- மாணவர்கள் ஏற்கெனவே படித்த பெரிய புத்தகங்களுள் அவர்களுக்குப் பிடித்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன் கதையை மீண்டும் வாசிக்க வேண்டும்.

**2) புதிய புத்தகத்தை அறிமுகம் செய்தல்**




- பெரிய புத்தகத்தின் முன்னட்டையைக் காட்டாமல் கதையில் இடம்பெறும் முக்கியக் கருத்தைப்பற்றிப் பிள்ளைகளின் முன்னறிவுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாட வேண்டும்.

- பிறகு, பெரிய புத்தகத்தின் முன்னட்டையைக் காட்டிக் கதையின் தலைப்பு, எழுதியவரின் பெயர், மறுவரைவு செய்தவரின் பெயர், ஓவியரின் பெயர் ஆகியவற்றை வாசிக்க வேண்டும்.

- கதையின் தலைப்பையும் முன்னட்டையிலுள்ள படத்தையும் தொடர்புபடுத்திக் கேள்விகள் கேட்கலாம் அல்லது கதையை முன்னுரைக்கச் சொல்லலாம்.

### 3) முதல் வாசிப்பு



- வகுப்பில் தரமிக்க கலந்துரையாடல் நிகழும்வண்ணம் முதல் வாசிப்பை நடத்த வேண்டும். இதற்கு உரையாடல்வழிப் படித்தல் உத்திமுறை **(Dialogic Reading)** பரிந்துரைக்கப்படுகிறது.

- **CROWD-**இன் அடிப்படையில் அமைந்த வினாக்களைப் பயன்படுத்தி **PEER-**இல் குறிப்பிட்டுள்ளவற்றைச் செய்ய வேண்டும். இதற்குப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலுள்ள படங்களைப் பயன்படுத்தி, அவற்றைச் சுட்டிக்காட்டி வினாக்கள் கேட்டுக் கலந்துரையாட வேண்டும்.

- பிறகு, அந்தப் பக்கத்திற்குச் செல்வதற்குமுன் வினாக்கள் கேட்டுக் கதையின் அடுத்த நிலையை முன்னுரைக்கச் சொல்லவும்.

- இந்தப் பகுதியைப் பற்றிய கூடுதல் தகவல்கள் பின்னிணைப்பு **3-**இல் உள்ளன.

4) இரண்டாம் வாசிப்பு



- பெரிய புத்தகத்தின் கதையை இடைநிறுத்தமின்றித் தொடர்ச்சியாகச் சுட்டியை நகர்த்தி வாசித்து முடிக்க வேண்டும்.

- கதையை வாசிக்கும் குரலில் ஏற்ற இறக்கத்தோடு உயிரோட்டமாக வாசிக்க வேண்டும்.

- ஆசிரியருடன் இணைந்து வாசிக்கப் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.

- கதையை வாசித்து முடித்தபின் பிள்ளைகளைக் கதையைப்பற்றிப் பேச ஊக்குவிக்க வேண்டும்.

அல்லது

- அவர்களைப் பெரிய புத்தகத்திலுள்ள நிகழ்வுகளுடன் தங்கள் வாழ்க்கை அனுபவங்களைத் தொடர்புபடுத்திச் சொல்ல ஊக்குவிக்க வேண்டும்.